ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# பூர்வாசார்யர் அருளிச்செய்த
# வாக்ய குருபரம்பரா வ்யாக்யாநமும்,

திருவல்லிக்கேணியில் உபயவேதாந்த ப்ரவர்த்தகரான
வித்வான் - ஸ்ரீமான் - வைத்தமாநிதி - முடும்பை,
**ஸ்ரீநிவாச அப்பங்கார்ஸ்வாமிகளால்,**
பரிசோதிக்கப்பட்டு;

கோயில் கந்தாடை
அண்ணன்ஸ்வாமிகளின் திருவடிசம்பந்தியும்,
திருவல்லிக்கேணி, பைகிருப்ஸ்ரோட்,
ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய புஸ்தகசாலாதிகாரியுமாகிய
**கா. வே. திருக்கச்சிநம்பி தாஸரால்**
சென்னை திருவல்லிக்கேணி,
கம்மர்ஷியல் அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பட்டது.

1904.

1 - 3 PAGES MISSING IN BOOK

என்கிறபடியே அஸத்கல்பராய் - போகமோர்க்ஷஸஶூந்யராய் (ஸம்யுக்தமேதம் க்ஷரமக்ஷரஞ்ச) என்கிறபடியேதிலதைவத் தாருவந்ஹிவத்துர்விவேச த்ரிகுண துரத்யயாநாத்யசித்ஸம் பந்த திரோஹிதஸ்வப்ரகாசராயிருக்கிற ஸம்ஸாரிசேதநருடைய இழவை யநுஸந்தித்து (ஸஏகாகீநரமேத) என்றும் (ப்ருசம் பவதி து:கித:) என்றும் - சொல்லுகிறபடியே அத்யந் தவ்யாகுலசித்தனாய் - இவர்கள் கரணகளேபரங்களையிழந்து (ஹாநபக்ஷ இவாண்டஜ:) என்கிறபடியே இறகொடிந்த பக்ஷிபோலே கிடக்கிற தசையிலே (நாமரூபேவ்யாகரவாணி) என்றும் (அந்நாள் நீதந்த வாக்கையின்வழி) என்றும் சொல்லுகிறபடியே இவர்களுக்கு கரணகளேபரங்களைக் கொடுத்து அவற்றைக்கொண்டு வ்யாபரிக்கைக்கீடான சக்தி விசேஷங்களையுங் கொடுத்து தேஹாத்மாபிமாநமும் அந்ய சேஷத்வமும் ஸ்வஸ்வாதந்த்ரியமுமான முக்குழியிலே விழுந்து அநர்த்தப்படாதே தன்னையாச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்குடலாக (அபௌருஷ மப்ரபவம்) என்கிறபடியே அபௌருஷேயமாய் அதஏவபுருஷசேமுஷீதூஷிதமாலிந்ய விநிர்முக்தமாய் (வேதசாஸ்த்ராத் பரம்நாஸ்தி) என்கிறபடியே தனக்குமேற்பட்டதொரு சாஸ்த்ர மின்றியேயிருப்பதாய் ஸ்வத:ப்ரமாணமான வேதத்தை (யோவைவேதாம்ஸ்ச ப்ரஹிணோதிதஸ்மை) (அருமறையை வெளிப்படுத்த வம்மான்) என்கிறபடியே நாராயணத்வப்ரயுக்தமான தன்னுதார்த்தறிப்பாலே தானே ப்ரவர்த்திப்பித்த விடத்திலும் ததர்த்த நிர்ணயந்தான் ஸர்வசாகா ப்ரத்யயந்யாதி ஸாபேக்ஷமா யிருக்கையாலே அல்பமதிகளுக்கு அர்த்தநிச்சயம்பண்ணுகையரிதென்றும் - இம்முகத்தாலே இவர்கள் திருந்தி கரைமரஞ்சேருகையும் அரிதென்றும் - உபதேசபரம்பரைகளாலே யிவர்களைத்திருத்தி உஜ்ஜீவிப்பிக்கையெளிதென்றும் - திருவுள்ளம்பற்றி (ஆசார்யாணுமஸாவஸாவித்யாபகவத:) என்றும் உபதேசந்

தான் பகவானுன் தானடியாக வந்ததாயிருக்குமதாகையாலே யதுக்காக (முன்னை வண்ணம்பாலின்வண்ணம்) என்றும் (சசிவர்ணம்) என்றும் (வல்லனெம்பிரான் விட்டுவே) எனறும் சொல்லுகிறபடியே திருமந்த்ரத்தை யுபதேசிக்குமிடத்தில் - ததுபதேஷ்டாவுக்கு வடிவாயிருந்துள்ள ஸ_த்தஸ்வபாவத்வ சப்தஸம்பத்வாதசங்கிதாகடித கடகா ஸாமர்த்யாதிகளை யுடையவனாய் (பஹுதாவிஜாயதே) என்றும் (சன்மம் பலபலசெய்து) என்றும்சொல்லுகிறபடியே பலவகைப் பட்டிருந்துள்ள விபவங்களில் வைத்துக்கொண்டு (மத்யேவிரிஞ்சிகிரீஶம் ப்ரதமாவதார:) என்னும்படி ப்ரதமாவதாரமான மஹாவிஷ்ணுவாய்க் கொண்டிந்த அண்டாந்தர்வர்த்தியான ஸத்யலோகத்துக்கும் அவ்வருகாயிருந்துள்ள ஸ்ரீவிஷ்ணு லோகத்திலே (ஜகதப்ரக்ருத யேஸோய மிச்சாவதார:) என்கிறபடியே யிந்த ஜகத்தை வாழ்விப்பதாக (ஶ்ரோண நக்ஷத்ரம் விஷ்ணுர்தேவதா) என்னும்படி விஷ்ணுர் தேவதாகமான திருவோண மென்கிற திருநக்ஷத்ரத்திலே ஸ்வேச்சையா ஸ்வயமேவாவதரித்தருளி உடனே (இறையு மகலகில்லேன்) என்றிருக்கும் பெரிய பிராட்டியாரையும் அந்த ஸ்ரீவிஷ்ணு லோகத்திலே தானே (பத்மேஸ்திதாம்) என்றும் (தேனேமலரும் - பூமேலிருப்பாள்) என்றும் (விஷ்ணுபத்நீ) என்றும் சொல்லுகிறபடியே அப்பொழுதைத் தாமரைப்பூவிலே மஹாலக்ஷ்மீ என்கிற திருநாமத்தை யுடையளாய் ஸ்வமஹிஷியாகத்தானே திருவவதரிப்பித்தருளி (தாப:புண்ட்ரஸ்ததா நாம - மந்த்ரோயாகச்சபஞ்சம: - அமீபரமஸம்ஸ்காரா: - பாரமைகாந்த்யஹேதவ:) என்று ரஹஸ்யத்ரயோபதேசந் தான் தாபோர்த்வ புண்ட்ரநாம மந்த்ரயாக பூர்வகமாக இருக்கிறதோ பாதி (பரம்பராமுபதிசேத் குருணம்ப்ரத மோகுரு: - ஆத்மவித்யா விசத்யர்த்தம் - ஸ்வாசார் யாத்யாம் த்விஜோ

த்தம:) என்றும் (ஸ்ஹஸ்ரபுருஷம்வாபி சதபூருஷமேவவா -
த்ரிஸப்த புருஷம்வாபி த்விஸப்த தசபூருஷம்) என்றும் (ஆ
தாவுபதி சேத்வேதே) இத்யாதிகளில் குருபரம்பராஸங்க்ரஹ
மா யிருந்துள்ள அஸ்மத்குருப்யோ இத்யாதி வாக்யத்ரயோப
தேச பூர்வகமா யிருக்கும் என்கைபாலே (ஸ்ரீவிஷ்ணு லோகே
பகவாந் விஷ்ணுர் நாராயணஸ் ஸ்வயம்ப்ரோக்தவாந் மந்த்ர
ராஜாதீந் லக்ஷ்ம்யை தாபாதி பூர்வகம்) என்றும் (விஷ்ணுமாதி
குரும் லக்ஷ்ம்யா: - மந்த்ரரத்நப்ரதம்பஜேத்) என்றுஞ் சொ
ல்லுகிறபடியே அவளுக்குத்தாபோர்த்வ புண்ட்ரதாஸ்யநாமப்
ரதாந புரஸ்ஸரமான இந்த வாக்யத்ரயோபதேச பூர்வகமாக
ஸ்வரூபோபாய புருஷார்த்தயாதாத்ம்ய ப்ரதிபாதகமான ரஹ
ஸ்யத்ரயத்தை நேராகத்தானே உபதேசித்தருளி - அப்படி
யே (ஸோபதிஷ்டபதி: ப்ரீத்யா தாப:புண்ட்ராதி பூர்வகம் -
விஷ்ணுலோகே வதீர்ணாய ப்ரியாய ஸததம்ஹரே: - ஸேநே
சாய ப்ரியா விஷ்ணோர் மூலமந்த்ரத்ரயாதிகம்) என்கிறபடியே
அவளைக்கொண்டு அந்த ஸ்ரீவிஷ்ணு லோகத்திலேதானே யவ
தீர்ணரான ஸேனைமுதலியாருக்கு மிந்த க்ரமத்திலேரஹஸ்ய
த்ரயோபதேசத்தைப் பண்ணுவித்து - பின்னையு மப்படியே
(ஸேநேஸஸ் ஸ்வயமாகத்ய ப்ரீத்யா ஸ்ரீதரீம்ஸுபாம் - சடகோ
பாய முநயே திந்த்ரிணீ மூலவாஸிநே - தாபாதி பூர்வகம் மந்
த்ர த்வயஸ்லோகவராத் க்ரமத் - விஷ்ணுபத்ந்யா மஹாலக்ஷ
ம்யா நியோகதுபதிஷ்டவாந்) என்கிறபடியே யிந்த க்ரமத்தி
லேதானே ஸேனைமுதலியாரைக்கொண்டு திருநகரியிலே திரு
ப்புளியாழ்வா ரடியிலே யெழுந்தருளி யிருக்கிற ஆழ்வார்க்கு
ரஹஸ்யத்ரயோபதே சத்தைப்பண்ணுவித்து உடனே தான்
அவர்க்கு (மயர்வறமதிநலமருளி) (புநச்சநாதமுநயே பஞ்சஸ
ம்ஸ்கார பூர்வகம்-பட்டநாதப்ரப்ருதிபிர் நிமித்தைர் திவ்யயோ
கிபி: - திவ்யைர்விம்சதிஸங்க்யாகை: ப்ரபந்தைஸ்ஸஹதே

சிக: - ஸ்வோக்தம் த்ராமிடவேதாநாம் சதுர்ணுமுபதேசக்ருத்) என்கிறபடியே யாழ்வாரைக்கொண்டு - அத்திருநகரியிலே திருப்புளியாழ்வா ரடியிலே தானே நாதமுனிகளுக்குமிந்த க்ரமத்திலே ரஹஸ்யத்ரயோபதேசத்தை திவ்ய ப்ரபந்தோபதேசாதி சிரஸ்கமாகப் பண்ணுவித்து - பின்னையு மப்படியே அந்த நாதமுநிகளைக்கொண்டு உய்யக்கொண்டார் தொடக்கமானார்க்கும் - உய்யக்கொண்டாரைக் கொண்டு மணக்கால் நம்பி தொடக்கமானர்க்கும் - மணக்கால் நம்பியைக்கொண்டு ஆளவந்தார் தொடக்கமானர்க்கும்-ஆளவந்தாரைக்கொண்டு பெரியநம்பி தொடக்கமானர்க்கும் பெரிய நம்பியைக்கொண்டு உடையவர்க்கும் - இந்த க்ரமத்திலே ரஹஸ்யத்ரயோப தேசத்தைப் பண்ணுவித்து - பின்னையு மப்படியே யுடையவரைக்கொண்டு ஆழ்வான் ஆண்டான் முதலான வெழுபத்துநாலு முதலிகளுக்கும் - எம்பார் அருளாளப்பெருமாளெம்பெருமானர் தொடக்கமான எழுநூறு ஜீயர்களுக்கும் - மற்றும்அநேகஸ்ரீவைஷ்ணவர்களுக்கும்இந்த க்ரமந்தப்பாமே ரஹஸ்ய த்ரயோபதேசத்தைப் பண்ணுவித்து - பின்னையும் அப்படியே உடையவர் தர்சநத்தை நிர்வஹித்துக்கொண்டு போருகிறகாலத்திலே (ப்ரீத்யா ப்ருநக் ப்ருதக்சிஷ்யை: - ப்ரணமேதீஸ்வராவதி - ஸ்வாராக்யம் யாவதஜ்ஞாதும்வாக்யம் தாவ தநுஸ்மரேத்) என்றும்(ப்ரத்யஹம் ப்ரணதைச்சிஷ்யை: ப்ரபாதே பத்மஸம்பவ - தத்யதாவிதிநா நித்யம் ப்ரவர்த்தவ்யம் குரோ:குலம்) என்கிறபடியே இம்மூன்று வாக்யத்துடனே - ஸ்ரீமதேராமாநுஜாயநம: - என்று தொடங்கி ஸ்ரீதராய நம:-என்கிற வாக்யத்தளவான பத்துவாக்யத்தையுஞ் சேர்த்து பதின்மூன்று வாக்யமாக்கி யித்தை மேலோரான நம்மாசார்யர்கள் தந்தாமுக்குத் தஞ்சமாக அநுஸந்திப்பதுந் தந்தாமையாச்ரயித்தார்க் குபதேசிப்பதுஞ் செய்யக்கடவர்க ளென்று

தாமே ஆழ்வானைக்கொண்டு நியமித்தருளி யிப்படி சேதநஸ்வ ரூபத்தை பல்லவித மாக்கியும் புஷ்பிதமாக்கியும் பலப ர்யந்த மாக்கியும் செய்தது வாய்த்து (செல்வனுய் துளக்கற்றமுதமா) யென்றும் (விஜ்வர: - ப்ரமுமோத:) என்றுஞ் சொல்லுகிறபடியே உள்வெதுப்புத் தீர்த்து நிர்வ்ரு தனு யிருந்தான் (அந்வயாதபிசைகஸ்ப ஸம்பக்ங்யஸ்நாத்ம ம ஹோஹரௌ - ஸர்வ ஏவப்ரமுச்யேரந் நரா: பூர்வேபரேத தா) என்றும் (அர்வாம் சோயத்ப்த ஸிரஸிஜத்வம் த்வமாச்ரி த்ய பூர்வே - மூர்த்நாயஸ் யாந்வய முபகதா தேசிகாமுக்திமா ப்தா: - ஸோயம் ராமாநுஜ முநிரபிஸ்வீய முக்திகரஸ் தாம் - யத்ஸம்பந்தா தமநுதகதம் வர்ண்யதே தார்க்ஷ்யநாத:) என் றும் சொல்லுகிறபடியே மூன்புள்ள முதலிகளுக்கும் பின் புள்ள முதலிகளுக்கு மொக்க வுத்தாரகரான் வுடையவர் ஸர் வஜ்ஞரா யிருக்கச்செய்தேயும் ததாபிஸமயாசாரந்ஸ்தாபயந் ஸாம்ப்ரதாயிகம்) என்கிறபடியே தமக்கு ஸத்ஸம்ப்ரதாய பரி ஸுத்தி யுண்டென்னு மிடந்தோற்ற - அஸ்மத்குருப்யோ - இத் யாதி வாக்யத்ரயத்தையும் தாமநுஸந்திக்கும்போது - முந் தின் வாக்யத்தில் குருபதப்ரதிபாத்யர் பெரிய நம்பியென்றும் அதில் பஹுவசநப்ரதிபாத்யர் திருக்கச்சி நம்பியும் - பேரரு ளாளப் பெருமாளும் என்றும் - இரண்டாம் வாக்யத்தில் பர மகுருப்ரதிபாத்யர் ஆளவந்தாரென்றும் - அதில் பஹுவசந ப்ரதிபாத்யர் ஸப்ரஹ்மசாரிகளான பெரியோர்க ளென்றும் - மூன்றும் வாக்யத்தில்குருபத ஸர்வசப்த பஹுவசந ப்ரதிபா த்யர் மணக்கால்நம்பி தொடக்கமான மேலோரெல்லாருமென் றுங் கண்டுகொள்வது.

அப்படியே உடையவர்க்கு முன்புள்ள முதலிகளில் வை த்துக்கொண்டு பெரிய நம்பி இவ்வாக்யத்ரயத்தை அநுசந்

திக்கும்போது முந்தினவாக்யத்தில் - குருபதப்ரதிபாத்யர், ஆளவந்தா ரென்றும் - இரண்டாம் வாக்யத்தில் பரமகுருப்ரதிபாத்யர் மணக்கால் நம்பி யென்றும் -இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் - இவர்களுக்கு குருபசக்தியிலே ருசியை ஜநிப்பித்த ஸ்ரீவைஷ்ணவர்களும் அவர்களோடு சங்கதியை யுண்டாக்கின ஈச்வரனுமென்றும் - மூன்றும்வாக்யத்தில் குருபத சர்வசப்த பஹுவசந ப்ரதிபாத்யர் உய்யக்கொண்டார்தொடங்கி ஸ்ரீய:பதி யளவாயுள்ள அனைவருமென்றும்கண்டுகொள்வது - அப்படியே ஆளவந்தாரிவ்வாக்யத்ரயத்தையும் அநுஸந்திக்கும்போது குருபதப்ரதிபாத்யர் மணக்கால் நம்பி யென்றும் த்விதீய வாக்யத்தில் பரமகுரு ப்ரதிபாத்யர் உய்யக்கொண்டாரென்றும் இரண்டிலும் பஹுவசந ப்ரதிபாத்யர் யதாஸம்பவமிதில் ருசியைப் பிறப்பித்த ஸ்ரீவைஷ்ணவர்களும் ஈச்வரனு மென்றும் - மூன்றும் வாக்யத்தில் குருபத ஸர்வ சப்தபஹுவசந ப்ரதிபாத்யர் ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி ஸ்ரீதரனளவாயுள்ள அனைவருமென்றுங் கண்டு கொள்வது. அப்படியே மணக்கால் நம்பி இவ்வாக்யத்ரயத்தையும் அநுஸந்திக்கும்போது - ப்ரதம த்விதீயவாக்யஸ்த குருபரமகுரு ப்ரதிபாத்யர் உய்யக்கொண்டாரும் நாதமுனிகளுமென்றும் - இரண்டிலும் பஹுவசந ப்ரதிபாத்யர் யதாஸம்பவமித்தை யிசைப்பித்த ஸ்ரீவைஷ்ணவர்களுமீச்வரனுமென்றும்- த்ரீதீய வாக்யஸ்த குருபதஸர்வசப்தபஹுவசந ப்ரதிபாத்யர் நம்மாழ்வார் தொடக்கமானரெல்லாரு மென்றுங் கண்டு கொள்வது - அப்படியே உய்யக்கொண்டார் இவ்வாக்யத்ரயத்தையு மநுஸந்திக்கும்போது ஆதிமத்ய வாக்யகத குருபரமகுருபத ப்ரதிபாத்யர் நாதமுனிகளும் ஆழ்வாருமென்றும் - இரண்டிலும் பஹுவசநப்ரதிபாத்யர் யதாஸம்பவமிதில் ப்ரேமத்தை ஜநிப்பித்த பெரியோர்களும் எம்பெருமானு மெ

ன்றும் - த்ரிதீய வாக்யஸ்த குருபதஸர்வசப்த பஹுவசநப்ர
திபாத்யர் ஸேனைமுதலியார் தொடக்கமான மேலோரனைவரு
மென்றுங் கண்டுகொள்வது - அப்படியே நாதமுநிக ளிவ்வா
க்யத்ரயத்தையும் அநுஸந்திதக்கும்போது ப்ரதம த்விதீய வாக்
யகதகுருபரமகுருபத ப்ரதிபாத்யர் ஆழ்வாரும் சேனைமுதலி
யாரு மென்றும் - இரண்டிலும் - பஹுவசந ப்ரதிபாத்யர் த
த்ஸம்பந்தகடகரான ஸ்ரீவைஷ்ணவர்களு மெம்பெருமானும்
என்றும் - த்ரிதீயவாக்யகதகுருபத ஸர்வசப்த பஹுவசநப்ர
திபாத்யர் பிராட்டியு மெம்பெருமானும் மற்று மங்குள்ளாரு
மனைவருமென்றுங் கண்டுகொள்வது. அப்படியே ஆழ்வார் இ
வ்வாக்யத்ரயத்தையும் அநுஸந்திக்கும்போது குருபரமகுருப்
ரதி பாத்யர் சேனைமுதலியாரும் பிராட்டியும் என்றும் - இர
ண்டிலும் பஹுவசந ப்ரதியாத்யர் இவ்விருவர்க்கு முயிர் நிலை
யாயிருப்பார் சிலரென்றும்- த்ரிதீயவாக்யகத குருபநஸர்வ ச
ப்த பஹுவசந ப்ரதிபாத்யர் ஸர்வேச்வரனும் வ்யூஹமும் விப
வமும் நித்யஸூரிகளு மென்றுங் கண்டுகொள்வது - இப்படி
யே ஸேனை முதலியாரு மிவ்வாக்யத்ரயத்தையு மநுஸந்திக்கு
ம்போது ப்ரதமத்விதீய வாக்யகத குருபரமகுரு ப்ரதிபாத்யர்
பிராட்டியும் விஷ்ணவவதாரமான எம்பெருமானுமென்றும்
இரண்டிலும் பஹுவசநப்ரதியாத்யர் அவளுக்கு ஸ்தநபாஹு
த்ருஷ்டி ஸ்தாநீயருமான மற்றைப் பிராட்டிமாரு மவனடிமை
கொள்ளுகிற மற்றையமரர்கள் தாங்களுமென்றும் - த்ரிதீய
வாக்யகத குருபதஸர்வ ஸப்தபஹுவசநப்ரதிபாத்யர் இவ்வவ
தாரத்திற்கு நாற்றங்காலான க்ஷீரார்ணவ நிகேதநனும் மற்று
ம் வ்யூஹாவதாரங்களும் ச்வேதத்வீபவாஸிகளென்றும் - தா
ங்க ளிப்புடைகளிலே யிவற்றுக்குப் பொருள் சொல்லக்கடவ
து - அப்படியே பிராட்டி யிவ்வாக்யத்ரயத்தையும் அநுஸந்தி
க்கும்போது ஆதிமத்யமவாக்யகத குருபரமகுரு ப்ரதிபாத்யர்

விஷ்ண்வவதாரமான எம்பெருமான் தானும் அவ்வவதாரகந்
தமான வ்யூஹ வாஸுதேவனென்றும் - இரண்டிலும் பஹு
வசநப்ரதிபாத்யர் பெரிய திருவடி தொடக்கமானரும் ஸங்கர்
ஷணுநிருத்த ப்ரத்யும்நர்களென்றும் - த்ரிதீய வாக்யஸ்த கு
ருபத ஸர்வசப்த பஹுவசந ப்ரதிபாத்யர் (வானிளவரசு வை
குந்தக்குட்டனும்) (ஓடும்புள்ளேறி)ப்படியேயிச்சேதநனுக்காக
இவ்விபூதியிலே அவன்பரிக்ரஹிக்கும் சில அவதாரங்களும்
நித்ய ஸித்தருமென்றும் யதாஸம்பவ மிப்புடைகளிலே யிவற்
றுக்குப் பொருள் சொல்லக் கடவது. ப்ரதமாவதாரமான
விஷ்ண்வவதாரமும் அவ்வவதார கந்தயான (பாற்கடலுட்
பையத்துயின்ற பரமனும்,) நிவாஸமான வைகுந்தவானுடனும்
தர்ம்யைக்யத்தாலேபேதமன்றிக்கே ஏகதத்வமாயிருந்தார்களே
யாகிலும் பெரியபெருமாளுக்கும் பெருமாளுக்கும் தர்ம்யை
க்யமிருக்கச்செய்தே (நாராயணமுபாகமத்)என்று விக்ரஹ
பேதத்தாலேயே உபகந்த்ருத்வாபகந்த்ருத்வங்களைச் சொன்ன
வோபாதி யிவ்விடத்திலும் விக்ரஹ பேதத்தையிட்டு இம்மூவ
ர்க்கு மிங்ஙன் குருத்வபரமகுருத்வ ஸர்வகுருத்வங்களைச் சொ
ல்லக் குறையில்லை. உடையவர்க்குப் பின்புள்ளமுதலிகளிவற்
றைக்கொண்டு (ராமாநுஜ பதச்சாயா) என்னும்படி அவர்தி
ருவடிகளிலே யாச்ரயித்தவர்களுக்குநிழலுமடிதாறுமாய்க் கொ
ண்டு குருப்ரம்பராநுப்ரவிஷ்டரான எம்பாரிவ்வாக்யத்ரயத்
தையும் அநுஸந்திக்கும்போது அதில் குருபரமகுரு ஸர்வகுரு
பத பஹுவசந ப்ரதிபாத்யர் கோபலிவர்த்த ந்யாயத்தாலே பி
ள்ளானும் ஆழ்வானும்ஆண்டானும் அநந்தாழ்வானும் என்று
ம் அவர்களுக்கு அபிமதராயிருந்துள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெ
ன்றும் பூர்வம்போலே யிங்ஙனே விபஜித்துப் பொருள் சொ
ல்லக் கடவது. அப்படியே எம்பார் திருவடிகளிலே ஆஸ்ரயித்
த பட்டர் இவ்வாக்யத்ரயத்தையுமநுஸந்திக்கும்போது இதில்

குருபரமகுரு ஸர்வகுரு பத பஹுவசநப்ரதிபாத்யர் அடைவேஎம்பாரும் ஆழ்வானும்ஆண்டானும் பிள்ளானும் என்றும் அவர்களுக்கு அந்தரங்கராயிருந்துள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களென்றும் பூர்வம்போலே யிங்ஙனே விபஜித்துப் பொருள்சொல்லக் கடவது. அப்படியே பட்டர் திருவடிகளிலே யாஸ்ரயித்த நஞ்ஜீயர் இவ்வாக்ய த்ரயத்தையும் அநுஸந்திக்கும்போது இதில் குருபரமகுரு ஸர்வகுருபத பஹுவசநப்ரதிபாத்யர்பட்டரும் ஆழ்வானும் எம்பாரும் பிள்ளாணுண்டான் தொடக்கமாநருமென்றும், பூர்வம்போலே யதாஸம்பவ மிங்ஙனே விபஜித்துப் பொருள் சொல்லக்கடவது. பின்னையு மப்படியே நஞ்ஜீயர்திருவடிகளிலே யாஸ்ரயித்த நம்பிள்ளை இம்மூன்று வாக்யத்தையு மநுஸந்திக்கும்போது இதில் குருபரமகுரு ஸர்வகுரு பதபஹுவசநப்ரதிபாத்யர் நஞ்சீயரும் பட்டரும் எம்பாரும் பிள்ளானும் என்றும் அவர்களுக்கு ஸப்ரஹ்மசாரிகளாய் பஹுமந்த்வ்யராயிருந்துள்ள (இராமாநுஜனைத் தொழும் பெரியோர்களென்றும்-இங்ஙனே விபஜித்துப் பொருள்சொல்லக் கடவதுஇக்குருபரம்பரை தான் ஆரோஹண க்ரமத்திலே (ஆசார்யாணு மஸாவஸாவித்யா பகவத:) என்று பகவானளவுஞ் சென்று அவ்வருகிற்செல்லக்கடவதொன்று- இங்ஙனே இருந்தாலும் அவரோஹணக்ரமத்திலே வந்தால் (இராமாநுசன் றுள் பிடித்தார் பிடித்தாரைப்பற்றி இத்யாதிப்படியே மேன்மேலெனக் கொழுந்து விட்டுப்படர்ந்து செல்லக் கடவதொன்றுகையாலே-நம்பிள்ளைதிருவடிகளிலே யாஸ்ரயித்த வடக்குத் திருவீதிப் பிள்ளையும்-அவர் திருவடிகளிலே யாஸ்ரயித்த பிள்ளை லோகாசார்யரும்-அவர் திருவடிகளிலே யாஸ்ரயித்த திருவாய் மொழிப்பிள்ளையும்-அவர் திருவடிகளிலே ஆஸ்ரயித்த பெரியஜீயரும்-இவ்வாக்யத்ரயத்தையும் அநுசந்திக்கும்போது இவ்வாக்யத்ரயேகுருபரமகுரு சர்வகுருபதபஹுவச

நப்ரதிபாத்யர் இன்னாரின்னாரென்னு மிடம் ஆசார்யர்க
டைய திருநாமங்களிலேகண்டுகொள்வது-அப்படியே பஹு
சநப்ரதிபாத்யர் அவர்களுக் குயிர்நிலையாய்த்தந்தாமுக்கு ப
ஹுமந்தவ்யராய்-கொடியைக் கொள்கொம்பிலே துவக்கும்
போது சுள்ளிக்கால்போலே தந்தாமை யவ்வவர்கள் திருவடிக
ளிலே சேர்க்கும் ஸ்ரீவைஷ்ணவர்களென்றுங் கண்டுகொள்வ
து.*இனி ஸ்ரீமதேராமாநுஜாயநம: இத்யாதி வாக்யதசகத்தி
லும் வைத்துக்கொண்டுஸ்ரீயைநம:-ஸ்ரீதராயநம.-என்கிற வாக்
யத்வயத்தில்(ஸ்ரீரிதிப்ரதமாபிதாநம் லக்ஷ்ம்யா:) என்றும், (ஸ்ரீ
ரித்யேவசநாமதே) யென்றுஞ் சொல்லுகையாலே ஸ்ரீசப்தம்
பெரிய பிராட்டியார்க்கு வாசகமாயிருக்கும்-ஸ்ரீயந்தரதீதி
ஸ்ரீதர: - என்று யோகவ்யுத்பத்தியாலே எம்பெருமானுக்
கும் திருநாமமாயிருக்கும் மற்றை யெட்டு வாக்யத்திலும்
ஸ்ரீசப்தம் (நஜ்ஞாந துல்யம் கதமஸ்திகிஞ்சித்) என்றும் (பக்
வத்பத்திரேவாத்ர ப்ரபந்நாநாம் மஹாதநம்) என்றுஞ்சொல்
லுகையாலே ஜ்ஞாநபக்திகளாகிற மஹாசம்பத்துக்கு வா
சகமாயிருக்கும் - இதில் சில வாக்யங்களில் - ஸ்ரீசப்தம்
சவிபக்திக மதுப்ரத்யயோபேதமாயும் சில வாக்யங்களில்
லுப்த விபக்திக மதுப்ரத்யயோபேத மாயும் - சிலவாக்
யங்களில் மதுப்ரத்யயரேஹிதமாயும் - இங்ஙனே வைரூப்
யேண நிர்த்தேஸிக்கைக்கு நிபந்தநம் - சிலருடைய ஜ்ஞாந
பக்திகள் விசததமங்களாய் சிலருடைய ஜ்ஞாந பக்திகள்
விசததரங்களாய் சிலருடைய ஜ்ஞாந பக்திகள் விசதங்க
ளா யிருக்கையாலே - அதெங்ஙனே யென்னில் (பங்கயத்
தாள் திருவடியைப் பற்றின சேனைமுதலியா ருடையவும் -
அவர் - (அடிக்கண்ணி சூடிய வாழ்வாருடையவும் - அவர்
அடிபணிந்துய்ந்த வுடையவருடையவும் - ஜ்ஞாந பக்திகள்
விசததமங்களா யிருக்கும் (திருக்குருகூர் நம்பிக்கன்ப

நாதமுனிகளுடையவும் - தத்விஷயீகார பாத்ரபூதரா
ன யாமுனைத்துறைவ ருடையவும் - ஜ்ஞாநபக்திகள் விசத
தரங்களாயிருக்கும் - (சீலமிகு நாதமுனி சீருரைப்போனுன)
உய்யக்கொண்டாருடையவும் - தச்சிஷ்யரான மணக்கால்
நம்பியுடையவும் - தத்ப்ரிய சிஷ்யரான பெரிய நம்பியுடை
யவும் - ஜ்ஞாந பக்திகள் விசதங்களாயிருக்கும் - இவர்க
ளுடைய ஜ்ஞாநபக்திகள் ஏகரூபமாயிராதே யிங்ஙனே தா
தம்யமாவேற இருக்கைக்கு ஹேதுவேதென்னில் - சேனைமு
தலியாருடையவும் ஆழ்வாருடையவும் ஜ்ஞாநபக்திகள் தா
ன் ப்ரபத்தி மார்க்கத்தை விஷ்வக்சேந ஸம்ஹிதையி
லே ப்ரகடதர்சிப்பிக்கைக்கும் ப்ரபத்தவ்யனுன வெம்பெ
ருமான் படிகளையுள்ளபடி யனைவர்க்கும் அறிவிக்கைக்கும். அப்
படியே (ஸ்ரீயோனை சேனாபதிநா நிவேதிதம்தா தஜாநந்த முதா ர
வீக்ஷிணா) என்றும் மதியுடையார் சொல்லலாம்படி அவனடி
யார்கட் பிறந்தவையான திருவாய்மொழி முகத்தாலே (நுந்த
னன் றனதாள் நிழலிலே - கழல்களன்றி மற்றொருகளைகணி
லேன் காண்மின்களே - அடிக்கீழமர்ந்து புகுந்தேனே) என்று
ப்ரபத்திமார்க்கத்தைப் பலபடியாலும் தம்முடைய உக்த்யநு
ஷ்டாநங்களாலே ஸ்பஷ்டமாக்குகைக்கும் (உயர்வற வுயர்நல
முடையவன் - மயர்வறமதிநல மருளினன் - கண்ணன் - தே
வர்க்குந்தேவா) என்று ப்ரபத்தவ்யனுடைய படிகளையபற்றும்
பற்றுகப் பற்றியிருக்கைக்கும் (உம்முயிர் வீடுடையான்-யானே
நீ யென்னுடைமையும்நீயே-தொண்டர்தொண்டர்தொண்டன்)
என்றும் ப்ரபத்தாவின்படிகளையும் பலவகையாகப்ரதர்சிப் பிக்
கைக்கும் (பேரமர்காதல் கடல்புரையவிளைத்துக்கொண்ட வெ
ன்காதலுரைக்கிற் றோழி-மண்டிணி ஞாலமுமேழ்கடலு நீள்
விசும்புங் கழியப்பெரிதால் - சூழ்ந்த தனிற்பெரிய வென்ன
வா) - என்றும் பிராட்டிமார் பேச்சாலும் தம்பேச்சாலும் தம்

மூலடைய வாத்ஸல்யத்தை யறிவிக்கைக்கும் உறுப்பாயிருக்கை யாலே விசததமங்களாயிருக்கும் (உடையவருடைய ஸ்ரூக்திகளும்) (பவதுமமபரஸ்மின் ஸேமுஷீபக்திரூபா) என்று தாமும் (அச்யுதபதாம்புஜ யுக்மருக்மவ்யாமோஹத:) என்றும் வாணருளிச் செய்யலாம்படியாக விருத்தவையாய் கத்யத்ரய ஸ்ரீபாஷ்யமுகத்தாலே சரணாகதி சாஸ்த்ரம் பக்திசாஸ்த்ரங்களை யடைவே வெளியிடுகைக்கும் (அவ்வெழில் மறையில் சேராதவரைச் சிதைப்பதப்போ தொருசிந்தைசெய்தே) என்கிறபடியே தம்முடைய தாதாத்விக ப்ரதிபையாலே ப்ரதிவாதிவாரணப்ரகடாடோப விபாதகத்துக்கு (நாறுதடாவில் வெண்ணெயும் நூறுதடாநிறைந்த வக்காரவடிசிலும் நாய்ச்சியார் மனோரதித்தபடியே பரமஸ்வாமிகளான அழகர்க்கு மமுது செய்தருளப் பண்ணுகைக்கும் க்ருஷ்ணன் படைவீட்டிலே சென்று அவன்மகள் மாளிகையிலே யிருக்கிற ராமப்ரியரை (வருக வருக வருக விங்கே வாமனநம்பி வருகவிங்கே - கரியகுழற்செய்யவாய் முகத்தெங்காகுத்த நம்பி வருக விங்கே) இத்யாதியாலே தாமே யெழுந்தருளியவர் தம்மருகே (ஓடியோடி விரைந்தோடி வந்தால் என் செல்வப்பிள்ளாய் வாராயென்று அவர்க்குத் திருநாமஞ்சாத்தி தன்திருமார்பிலே யணைத்துக் கொள்ளுகைக்கும் புழுவன்பட்டவிருத்தாந்தத்தைத் திருக்கல்யாணி கரையிலே தம்சந்நிதியிலே சென்று மாறென்றில்லாமாருதியாண்டான் விண்ணப்பஞ் செய்யக் கேட்டுப் பெரிய ப்ரீதியோடே (செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரான பெரிய பெருமாளை மங்களா சாசநம் பண்ணுவதாகக் கோயிலுக் கெழுந்தருளும்போது தாமோ ரைம்பத்திருவரை (செயல் நன்றாகத் திருத்தி தத்விஷயத்திலே பதிவாயிருக்கும்படி நியமிக்கைக்கும் கரைகட்டாக் காவேரி போலே கரைபுரண்டாஸ்ரயித்த

வளவன்றிக்கே யிருக்கைக்கும் உட்லாயிருக்கையாலே விசதத மங்களாயிருக்கும் - ஸ்ரீமந்நாதமுனிகளுடையவும் ஆளவந்தாருடையவும் ஜ்ஞாநபக்திகளிங்ஙனே விஸ்ராவமாய்க் கரைபுரண்டிராமே யரையாறு பட்டுத் தாமாஸ்ரயித்த வள்விலேதானே யடங்கியொன்றிரண்டு ப்ரபந்தங்களை யிட்டருளுகைக்குடலா யிருக்கையாலே விசததரங்களா யிருக்கும்—உய்யக்கொண்டாருடையவும் மணக்கால் நம்பியுடையவும் பெரியநம்பியுடையவும் ஜ்ஞாநபக்திகள் கீழ்ச்சொன்னபடி யிராதே சுனேயாறுபட்டு பரிமிதங்களா யிருக்கையாலே விசதங்களாயிருக்கும்-இப்படி பதின்மூன்று வாக்கியங்களிலும் முத்தினவாக்கியங்கள் மூன்றும் வேதமாகிற சாஸ்த்ரருசி பரிக்ரஹீதங்களா யிருக்கும், மற்றை வாக்யங்கள் பத்தும் ஆசார்யருசி பரிக்ர ஹீதங்களா யிருக்கும்-அபௌருஷேயமாயும் பௌருஷேயமாயும் இருக்கிற ரஹஸ்யத்ரத்துக்கும் ஏகாவயவித்வஞ்சொன்ன வோபாதி யிப்படி அபௌருஷேயமாயும் பௌருஷேயமாயு மிருந்துள்ள விப்பதின்மூன்று வாக்யத்துக்கும் ஏகாவயவித்வஞ்சொல்லத் தட்டில்லை-அப்படியே (நமோருஷிப்ய:) என்றுப்போலே நமச்சப்தம் முன்னாக விவ்வாக்யத்ரயத்தையும் நிர்த்தேசியாதே அஸ்மத்சப்த முன்னாக-நிர்த்தேசித்த (அகிலபுவநஜந்ம) என்கிற விடத்திற்போலே மாங்களோக்தமான அகாரோபக்ரமத்வஸித்யர்த்தமாக - அப்படியே முந்திய வாக்யத்தை அகாரோபக்ரமஸித்யர்த்தமாக அஸ்மச்சப்தத்தை முன்னிட்டு நிர்த்தேசித்த வோபாதி மற்றை யிரண்டு வாக்யத்தையும்-அச்மஸ் சப்தத்தைத் தானே முன்னிட்டு நிர்த்தேசித்தும் - (சந்நோமித்ரஸ்ஸம் வருண:சந்நோபவத்வாயமா) என்னுமாப்போலே த்ரயோ தசவாக்யாத்மகமான விக்குரு பரம்பரா ரூபமாலா மந்த்ரந்தான் ஸ்ரீஸஹஸ்ரநாமமாலா மந்த்ரம்போலே அநேக நமச்சப்த சரீரகமாய்-த்வாரசேஷிகளுக்கும் அ

டைவேப்ராதாந சேஷிகளுக்கும் ப்ரதிபாதகமாய் - ப்ரதம மத்யமசரமாவதிருபமான பாவத்ரய ப்ரகாசகமாய் - உபதேஷ்டயுபதேசோபதேச்யரூப மூன்றுவர்க்கத்துக்கும் சாம்ப்ரதாயிகத்வ சாத்குண்ய யோக்யதைகளுக்கும் சம்பாதகமுமாய் (வக்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்) என்கையாலே த்வயத்தோபாதி சதாநு சந்தேயமாய்-தன்னை முன்னிட்டு ரஹஸ்யத்ரயத்தை யநுசந்திப்பாரை (நாவகாரியஞ்சொல்லிலாதவர்) என்று - (மயர்வற மதிநல மருளப் பெற்றார்) கொண்டாடும்படி பண்ணக்கடவதாய் - அஸ்மத் - என்று அகாராதியாக வுபக்ராந்தமாய் - அப்படியே அகார ஸ்ரீமச் சப்தங்களைப் பலவிடங்களிலு மிடையிலே யுடைத்தாய் ஸ்ரீதராயநம: - என்று மாங்களிகமான நமச்சப்தத்தோடே நியமிக்கப்பட்டதாய் இருக்கையாலே கார்சஸ்ந்யேந மங்களாத்மகமாயிருக்கும்.

வாக்யகுருபரம்பராவ்யாக்யாநம்.

சம்பூர்ணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

முற்றிற்று.

The Commercial Press, Tripli,cane Madras

# விளம்பரம்.

இதனடியில்கண்ட ஸ்ரீகோசங்கள் மொத்தமாக 10 வாங்குகிறவர்களுக்கு ஒன்று கமீஷனாகக் கொடுக்கப்படும்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| விலக்ஷணமோக்ஷாதிகாரி நிர்ணயம்—மேலான கிளேஸ்காயிதத்தில் அச்சிட்டது, தெலுங்கு-தமிழ்ஸ்லோகங்கள், தமிழ்வியாக்யானம்எரும்பியப்பா அருளிச்செய்தது. மார்பில்பைண்டு | 0 | 12 | 0 |
| மேற்படி காலிகோபைண்டு ... | 1 | 0 | 0 |
| நாலாயிர திவ்யப்ரபந்தம்... ... ... | 2 | 0 | 0 |
| நித்யாநுஸந்தானம் - முன்னடி பின்னடி ராகதாளம் நாலாயிர தமிழ்தனியன்கள், படங்களுடன் மார்பில் பைண்டு ... | 0 | 6 | 0 |
| மேற்படி கித்தான் பைண்டு ... | 0 | 7 | 0 |
| மேற்படி காலிகோபைண்டு ... | 0 | 8 | 0 |
| அஷ்டாதச ரகசியம் ... ... ... | 1 | 4 | 0 |
| மேற்படி பிரிவு அஷ்டாரகசியம் மார்பில் பைண்டு | 0 | 8 | 0 |
| மேற்படி கித்தான் பைண்டு ... | 0 | 9 | 0 |
| மேற்படி காலிகோபைண்டு ... | 0 | 10 | 0 |
| 18 குட்டிரகசியம் ... ... ... ... | 0 | 3 | 0 |
| 27 விரோதிபரிகாரம் (ஸ்ரீமனவாளமாமுனிகள் அருளியது) ... | 0 | 1 | 0 |
| தெலுங்கு லிபி ஸம்ஸ்க்ருத பாஷை அஷ்டஸ்லோகி | 0 | 2 | 0 |
| 3000 படி குருபரம்பரை ... ... ... | 0 | 12 | 0 |
| வாக்யகுருபரம்பரை ... ... ... | 0 | 1 | 0 |

**கா. வெ. திருக்கச்சிநம்பிதாஸ்.**